அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மாண்புமிகு உறுப்பினரின் கவலைக்கும் மருந்தாக அமையும் என்ற பதிலையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "என்னுடைய ஆட்சி இருக்கும்வரை தமிழகத்தில் ** என்கிற வார்த்தைக்கே இடமில்லை, 'ஆதரவற்றோர்' என்று அழைக்கப்பட வேண்டுமென்று" அறிவுறுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலும், நான் சொன்னதிலும் இருக்கின்ற ** என்கிற வார்த்தைக்குப் பதிலாக 'ஆதரவற்ற' என்கிற வார்த்தையை இணைத்துக் கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'ஆதரவற்ற' என்று மாற்றப்படுகிறது.

முற்பகல் 10-35

வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

145—

நெல் கொள்முதல் நிலையம்

***48439—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2019 ஜூலை 19]

திருவெறும்பூர் தொகுதி, பத்தாளப்பேட்டை ஊராட்சி, மேலமாங்காவனம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக மக்களால் பெரிதும் போற்றி வணங்கப்படுகிற ஆடி, முதல் வெள்ளிக்கிழமையன்று தன்னுடைய காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைகளை இங்கே எடுத்து வைக்கவிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

திருவெறும்பூர் தொகுதி, மேலமாங்காவனம் கிராமத்தில், வரும் நெல் கொள்முதல் பருவத்தில், அந்தப் பகுதியின் நெல் விளைச்சலுக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க அரசு ஆவன செய்யும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய பத்தாளப்பேட்டை ஊராட்சி என்பது திருவெறும்பூர் மையப் பகுதியிலிருந்து வெகு தொலைவிலிருக்கின்ற ஓர் ஊராட்சியாகும். இந்த பத்தாளப்பேட்டை ஊராட்சிக்கு அடுத்துதான் கீழமாங்காவனம், மேலமாங்காவனம் ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், கீழமாங்காவனம் பகுதிக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டும்; பத்தாளப்பேட்டை ஊராட்சியிலிருக்கின்ற டாஸ்மாக் கடையை இடமாற்றம் செய்ய வேண்டும் என பல கோரிக்கைகள் இருக்கின்றன. கடந்த ஜனவரி மாதம் எங்களுடைய கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஊராட்சி சபைக் கூட்டம் நடைபெற்றபோது, அங்கிருக்கின்ற மக்கள் மூலமாக வந்த கோரிக்கையின் அடிப்படையில் எழுப்பப்பட்ட கேள்விதான்

இந்தக் கேள்வி. இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை அமைக்க வேண்டும் என்று ஏன் கேட்கிறேன் என்றால், அந்தப் பகுதியைச் சுற்றி 3,000-க்கும் மேற்பட்ட குறு, சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். எனவே, பத்தாளப்பேட்டையில் இந்த வருடமே நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான முயற்சியை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளையில், எங்களுடைய பகுதியில் கூத்தைப்பார் என்கின்ற பேரூராட்சி இருக்கின்றது. கிட்டத்தட்ட 2,500 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்கின்ற நிலை அங்கு இருக்கிறது. எனவே, கூத்தைப்பார் ஊராட்சியிலும் இதேபோன்று ஒரு நேரடி நெல் கொள்முல் நிலையத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் கூத்தைப்பார், பத்தாளப்பேட்டை, வேங்கூராக இருந்தாலும் 8 கி.மீ. தூரம் சென்றுதான், அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மக்கள் பயன்படுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, கூத்தைப்பார் ஊராட்சியிலும் இதேபோன்று ஒரு நேரடி நெல் கொள்முல் நிலையத்தை இந்த அரசு அமைக்க வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதியான திருவெறும்பூர் தொகுதியில் உள்ள பத்தாளப்பேட்டை ஊராட்சி, மேலமாங்காவனம் கிராமத்தில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்தார்கள். அது, அங்கே அவர்கள் சென்றபோது, விவசாயிகள் வைத்த கோரிக்கை என்றும் குறிப்பிட்டார்கள். மேலமாங்காவனம் பகுதியை பற்றி எனக்கும் தெரியும். அது அசூருக்கு பக்கத்திலிருக்கிற ஒரு பகுதியாகும். ஏரிப் பாசனம், ஆற்றுப் பாசனம் ஆகிய இரண்டும் இணைந்திருக்கின்ற பாசனப் பகுதி ஆகும். அங்கு பொன்னி நெல்லை அதிகமாக விளைச்சல் செய்கிறார்கள். அங்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு நேரடி நெல் கொள்முதல் நிலையம் இருந்தது என்பது உண்மை. பொன்னி நெல்லுக்கு வெளி மார்க்கெட்டில் அதிகமான விலை கிடைப்பதாலும், அது முதல்

2019 ஜூலை 19]

இரகம் என்பதாலும், விவசாயிகளிடமிருந்து அந்த ஊரிலேயே வந்து வாங்கிக் கொள்வதற்கும், விவசாயிகள் அதிகமான விலைக்கு விற்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, அவர்கள் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நெல்லைக் கொண்டு வராததால், அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படாமல் இருந்திருக்கிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்கள் தொகுதியினுடைய விவசாயிகளின் கோரிக்கை என்று கூறியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியினுடைய நெல் விளைச்சல், தேவை ஆகியவற்றின் அடிப்படையில், அந்தப் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு நிச்சயமாக அரசு ஆவன செய்யும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூத்தைப்பார் பகுதியிலும் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். அங்கேயும் ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நடப்பு கொள்முதல் பருவத்தில் மட்டும் 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 27,780 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அவற்றில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் 3 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில், 2 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் முறையே 221 மெட்ரிக் டன், 285 மெட்ரிக் டன் என்ற அளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. நவில்பட்டு பகுதியிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டிருந்தார்கள். அதனையேற்று, அங்கே கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. நெல் வராததால், ஒரு மாதத்திலே அக்கொள்முதல் நிலையம் மூடப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதிகளுடைய தேவைகளை அறிந்து, தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக, உறுதியாக திறக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று எங்களுடைய சூரியூர் ஊராட்சியிலும், குண்டூர் ஊராட்சியிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும். ஏனென்றால், அங்கு 2,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அசூர், பழங்கானங்குடி, வேங்கூர், பத்தாளப்பேட்டை, கூத்தைப்பார் போன்ற பகுதிகளைச் சார்ந்திருக்கிற மக்கள் அதிகமாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால், தானியங்களையும், உரங்களையும் சேமித்து வைப்பதற்காக ஓர் உரக் கிடங்கு தேவைப்படுகிறது.

அதேபோன்று, நாளையுடன் இக்கூட்டத்தொடர் முடிவதால், மக்கள்மீது இருக்கின்ற அக்கறையால் இதைக் கேட்கின்றேன். வேறு என்ன கேட்கப் போகிறேன்? சர்வீஸ் ரோடுதான் கேட்கப் போகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, நிலத்தைக் கையகப்படுத்துவதில் அரசாங்கம் சிறப்பு கவனத்தைச் செலுத்தும் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் அதற்கான ஆரம்ப கட்ட வேலையைச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், நான்காவது ஆண்டாக நான் இதைக் கேட்கிறேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த வருடமே ஆரம்ப கட்ட வேலையைத் தொடங்குவதற்கான நிலையை உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளோடு நிறைவு செய்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்மிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசைப் பொறுத்தவரையில், இது விவசாயிகளுடைய நலன் காக்கிற அரசு. இந்த நடப்பு கொள்முதல் பருவத்தில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களைச் சார்ந்த பகுதிகளில் 1,766 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

2019 ஜூலை 19]

திறக்கப்பட்டு, 18 இலட்சத்து 25 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. 4 இலட்சத்து 78 ஆயிரம் விவசாயிகள் பயன்பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ECS மூலமாக 3200 கோடி ரூபாய் பணப் பரிவர்த்தனை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் சில ஊர்களைச் சொல்லி, அந்த ஊர்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு வாய்ப்பு இருந்தால் திறக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்தார்கள். அவையெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உரக் கிடங்கு அமைப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். உரக் கிடங்கு அமைப்பதைப் பொறுத்தவரையில், கூட்டுறவுத் துறையின்மூலம் ஆங்காங்கே கிடங்குகள் அமைக்கப்படுகிற பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசி அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

கால்நடை மருத்துவமனை

***571—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், இனாம்காரியந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*